10.02.2026.

சி.சி.01/2024

ம.சா.1. பாஸ்கர், த/பெ.சுப்பிரமணி. (புகார்தாரர்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது ஊர் வந்தவாசி தாலுக்கா அதியகுப்பம் கிராமம் ஆகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான தனியார் சுற்றுலா பேரூந்து வைத்து தொழில் செய்து வருகிறேன் மேலும் விவசாய தொழிலும் செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது நண்பர்மூலமாகதான் சுரேஷ் எனக்கு பழக்கமானார் என்றால் சரிதான். நானும் எனது மற்றொரு நண்பரான கோவிந்தன் என்பவரும் எதற்காக சுரேசை அணுகினோம் என்றால் குறைந்த வட்டியில் பணம் கடன் வாங்கி தருவதாக கூறியிருந்தார். நான் தமிழ்நாட்டில் வங்கியில் கடன் பெற்றுதான் மோட்டார் தொழில் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு சிபில் ஸ்கோர் அதிகமாக இருப்பதால் சுரேசை அணுகி வங்கியில் கடன ் பெற கோரினேன ் என்றால ் சரியல்ல. நான ் எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அந்த இரண்டு வழக்குகளும் காசோலை வழக்குகள்தான். மேற்படி இரண்டு வழக்குகளுக்கும் தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். எதிரியிடம் என்ன வகையான கடன் பெற்றுதரக்கோரினேன் என்றால் வியபார கடன் பெற்றத்தர கோரினேன். எவ்வளவு தொகை கடன் கோரினேன் என்றால் நான் குறைந்த பட்சம் 15கோடி கடன் பெற்றுத்தரக்கோரினேன் ஆனால் எதிரி 25 கோடிதான் கேட்க முடியும் அதற்கு குறைவாக கேட்க முடியாது என்று கோரினார். மேற்படி கடனுக்கு நான் ஏதாவது செக்கியூரிட்டி கொடுத்தேனா என்றால் அதற்கு எதிரி இது பிணையில்லாத கடன் என்றுதான் என்னிடம் கூறினார்.

நானும் எதிரியும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது மனைவியின் ஆதார அடையாள அட்டையை கடன் பெற எதிரியிடம் கொடுத்தேனா என்றால் நாங்கள் நடத்திவரும் தனியார் நிறுவனத்திற்கு நானும் எனது மனைவியும ் இயக்குநர்கள் என்பதால் எனது மனைவியின் ஆதார அட்டையையும் சேர்த்து கொடுத்தேன். எனக்கு சொந்தமான அசையா சொத்துக்களை எதிரியிடம் கோரிய கடன் தொகை பிணைக்காக கொடுத்தேனா என்றால் பிணைக்காக நான் கொடுக்கவில்லை. நான் எதிரியிடம் எவ்வளவு கடன் வாங்கி தரச்சொல்லி கேட்டேன் என்றால் முதலில் நான் 5 கோடிதான் கேட்டேன் படிப்படியாக என்னை ஆசைக்காட்டி மொத்தம் 25 கோடி வாங்கி தருவதாக சொன்னார். நான் தாக்கல் செய்த இவ்வழக்கில் எவ்வளவு தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மொத்தம் இரண்டு காசோலைகளில் 27 லட்சம் மற்றும் 25 லட்சம் ஆக மொத்தம் 52 லட்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சி.சி.எண்.2/2024 வழக்கில் எவ்வளவு தொகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மொத்தம் 16 லட்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரியிடம் கோரியிருந்த கடன் பரிவர்தனை என்ன ஆனது என்றால் வாங்கி கொடுக்கவில்லை. மேற்படி கடன் சம்மந்தமான செயல்முறைகள் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் 2021ம் ஆண்டு நடைபெற்றது. எப்போது கடன் சேன்ஷன் ஆகும் என்று எதிரி கூறினார் என்றால் நான் எப்போது கேட்டாலும் இன்னும் 2 மாதங்கள் ஆகும் என்று கூறிக்கொண்டே வந்தார். நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் கடன் தொகையை குறிப்பிட்டுள்ளேனா என்றால்

குறிப்பிடவில்லை. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலைகளின் எண் தெரியுமா என்றால் தற்போது ஞாபம் இல்லை. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். எதிரி அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த புகாரில் எதிரியிடம் 7 கோடி கடன் பெற்றுதரக்கோரியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதன் பின்னர் அவர் கடன் தொகை படிப்படியாக உயர்த்திவிட்டார். எனக்கு சிபில் கோர் அதிகமான இருந்ததால் எனக்காக எதிரி தாக்கல் செய்த கடன் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று எதிரி கூறினாரா என்றால் இது நாள்வரை எதிரி எந்த காரணமும் என்னிடம் கூறவில்லை. எனக்கு எதிரி எத்தனை காசோலைகள் கொடுத்தார் என்றால் 3 காசோலைகளை கொடுத்தார். மேற்படி காசோலைகளை எதிரி பூர்த்தி செய்யப்படாமல்தான் கொடுத்தாரா என்றால் இல்லை பூர்த்தி செய்துதான் கொடுத்தார். நான் எனது அசையா சொத்து விவரங்களை எதிரியிடம் கொடுக்காததால்தான் கடன் முறையீடு நிலுவையில் இருப்பதாக ஏதும் கூறினாரா என்றால் கூறவில்லை.

மேற்படி கடன் முறையீடுக்கு ஆகும் செலவினை யார் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பேசப்பட்டது என்றால் கடன் தொகை கிடைக்கும்போது மொத்த கடன் தொகையில் 2 சதவீதம் கொடுக்கவேண்டும் என்று பேசப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள புகாரில் மொத்த கடன் தொகையில் 10 சதவீத தொகையினை கமிஷனாக கொடுத்துவிட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது வெளி நாட்டிலிருந்து கடன் கொடுக்கும் நிறுவனத்திற்கு 2 சதவீதம் என்றும், 8 சதவீதம் கடன் பெற்று கொடுக்கும் எதிரிக்கு கொடுக்கவேணடும் என்றும் பேசப்பட்டுள்ளது அதனால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். நான் கொடுத்த சட்ட அறிவிப்பில் லீபே சர்வீஸ் என்று குறிப்பிட்டுள்ள நபரை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை, மேற்படி கம்பெனிக்கு எதிரியும் அவரது மனைவி மற்றும் அவரது தகப்பனார் இயக்குநராக இருப்பதால் சுயம்பு சிஸ்டம் நிறுவனத்திலும் இயக்குநர்களாக இருப்பதால் லீபே சர்வீசை தனியாக சேர்க்கவில்லை. நான் தாக்கல செய்த புகாரில் மேற்படி லீபே சர்வீஸ் நிறுவனத்தை பற்றி ஏதும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை எதிரி கொடுத்த காசோலை சுயம்பு சிஸ்டம் நிறுவனத்தின்மூலம் கொடுத்ததால் லீபே சர்வீசை தரப்பினராக சேர்க்கவில்லை.

**எதிரி தரப்புவழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

//**உண்மை நகல்**//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.